ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/30 - 2013 ජනවාරි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.03

*1791/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மாத்தறை மாநகர சபைக்கு உடைமையானதும் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டதுமான காணியினை 31.12.2012 இல் இருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இக்கட்டளை மூலம் உடமையாக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.*

*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,*
*கொழும்பு 3,*
*2012, திசெம்பர் 31.*

**அட்டவணை**

*தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவு, மாத்தறை மாநகர சபை எல்லைகளுக்குள்ளான உயன்வத்தை தெற்கு கிராமத்தில் அமைந்துள்ளதும், மாத்தறை நிலஅளவை அத்தியட்சகரால் 14.07.2012 என திகதியிடப்பட்ட முன்னீட்டுச் சுவடி இல. : MR/MRT/2012/147 இல் காணித்துண்டுகள் "A", "B" மற்றும் "C" எனக் காட்டப்பட்ட 1.5470 ஹெக்டேயார் (03ஏ. 03றூ. 11.45 பேர்ச்சஸ்) விஸ்தீரணக் காணியானது மதிப்பீட்டு இல. 1615 இணைக் கொண்டுள்ளது.*

*குறிப்பிட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :-*

*1. காணித்துண்டு இல. "A"*

*காணியின் பெயர் : மதிப்பீட்டு இல. 1615 இன் ஒரு பகுதி.*
*விஸ்தீரணம் : 0.7606 ஹெக்.*

*வடக்கு : அரசாங்க பொது வைத்தியசாலை வளவு அத்துடன் காணித்துண்டுகள் "B" மற்றும் "C" ;*
*கிழக்கு : காணித்துண்டு "B" மற்றும் இயற்கைக் கால்வாய் ;*
*தெற்கு : நில்வலா கங்கை ;*
*மேற்கு : மாத்தறை - காலி வீதி.*

2. காணித்துண்டு இல. "B"

காணியின் பெயர் : மதிப்பீட்டு இல. 1615 இன் ஒரு பகுதி.
விஸ்தீரணம் : 0.6921 ஹெக்.

வடக்கு : அரசாங்க பொது வைத்தியசாலை வளவு ;
கிழக்கு : இயற்கைக் கால்வாய் ;
தெற்கு : காணித்துண்டு "A" மற்றும் "C" ;
மேற்கு : காணித்துண்டு "A".

3. காணித்துண்டு இல. " C "

காணியின் பெயர் : மதிப்பீட்டு இல. 1615 இன் ஒரு பகுதி.
விஸ்தீரணம் : 0.0943 ஹெக்.

வடக்கு : காணித்துண்டு " B ";
கிழக்கு : காணித்துண்டு " B ";
தெற்கு : காணித்துண்டு " A ";
மேற்கு : காணித்துண்டு " B ".

1- 502

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.